# கவிதை

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு

ஆசிரியர் :
அ. யேசுராசா



புத்தரிடம்
தமிழ்த்தாயின் கேள்வி

ஓவியர் :
அ. மாற்கு

சித்திரை – வைகாசி 1995

விலை : ரூபா 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு
வாழ்த்துக்கள்!

லிங் பார்மசி

தட்டாதெருச் சந்தி,
57, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நல்ல நூல்களுக்கும்
பாடசாலை உபகரணங்களுக்கும் ... ...

பூபாலசிங்கம் பொத்தக நிலையம்

255, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



# கவிதை

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு

ஆசிரியர்:
அ. யேசுராசா

தேர் : 2
உலா : 1

சித்திரை - வைகாசி 1995

1, ஓடைக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


## 'கவிதை'யின் கவிதைகள்

இளங்கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'கவிதை' இதழ்களை வாசிக்கும்போது. ஈழத் தமிழ்க் கவிதைகளின் பரிணாம மாற்றம் புலப்பட்டது. இளங்கவிஞர்களின் கவிதைகள் ஆயினும் விடுதலைப் போராட்டம் சார்ந்த வாழ்வியல் அவலங்களை அவை பற்றியிருந்தன. பொதுவாய் 'இருப்பு' இன்றைய கவிதைகளின் மூல வேராக உள்ளது.

''இனி, புதிய செடிகளைப் பதியம் போடலாம்'' என்றால் இந்தக்கவிதை ('கூனுகிற செடி') வரி எமது புலம்பெயர்ந்த இருப்புப் பற்றி ஆயிரம் கேள்விகளை அல்லவா கேட்க வைக்கிறது.

...இவ்வாறான கவிதைகள் ('புதிய விதிமுறை') பெரும்பாலும் பாலஸ்தீனியர்களிடமிருந்தே பிறந்தன. தற்போது தமிழ் மண்ணில் ஊற்றெடுத்துள்ளது.

...போர்க்கவிதைகள் பற்றிச் சொல்வதென்றால், அண்மைக் காலங்களில் விருட்சம் பெற்று வந்த கரும்புலிகள் குறித்த கவிதைகளைச் சொல்லலாம்' உதாரணமாக, 'மூச்சதிர்வில்..' என்ற கவிதை.

...இவ்வாறு காலத்தோடு ஒட்டிய அனுபவங்களைத் தொட்டு நிறையவே கவிதைகள் யதார்த்தமாக எழுதப்படுவதும், அதிலும் பல இளங்கவிஞர்கள் ஆர்வம் கொண்டு எழுதிவருவதும், அதற்கு அ.யேசுராசா அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'கவிதை' இதழ் களம் அமைத்துக் கொடுப்பதும் ஈழத்துத் தமிழ்க் கவியுலகிற்குப் பெரும் பலமாகும்.

ப.ஸ்ரீஸ்கந்தன்
'மஞ்சரி' - 02.02.1995.,
(கனடா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இளமைக் குருதி
எதிர்காலத்தின் கணலைமூட்டும்;
விழித்த வாலிபம் நடைபோடுகுது!"
- ஸ்ரீ. ஸ்ரீ.

தேர் : 2 சித்திரை - வைகாசி 1995 உலா : 1

# சந்திரிகாவின் மாறாட்டங்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாடும், பேச்சுவார்த்தைகளும் முறிவடைந்துவிட்டன.

சந்திரிகாவின் கருத்துநிலையிலும், செயற்பாட்டிலும் மாறாட்டங்கள் பலவற்றைக் காணமுடிகிறது.

முதலாவதாக, விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்கிறார்; அதனால், சமாதானத்தின் மீதான விருப்பம் தமிழ் மக்களது மட்டுமே எனக் கருதுகிறார்.

இரண்டாவதாக, இச்சமாதானத்திற்கான விருப்பத்தினையும் சரணாகதிக்கான விருப்பமென விளங்கிக்கொள்கிறார்.

இதன் காரணமாகத்தான், பேச்சுவார்த்தையில் இழுத்தடிப்புக்களையும் விட்டுக்கொடாப் போக்கினையும் மேற்கொண்டதோடு, அரசு அதிகார அகங்காரத்தையும் சில வேளைகளில் வெளிப்படுத்தினார்.

போரினால் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமைகளையும், சொல்லொணாத் துயரங்களையும் நீக்கப் போவதாக ஆரம்பத்தில் சொன்னார். வார்த்தைகள் வெகு அலங்காரமானவையாய் இருந்தன; வார்த்தைகள்... வார்த்தைகள்... வார்த்தைகள்! ஆனால், தமிழ் மக்கள் வாழ்வில் இயல்பு நிலையை மீளக்கட்டியெழுப்புவதற்குரிய செயல்களைக் காணமுடியவில்லை. தடைகள் தளர்த்தப்பட்டு வழங்கப்பட்ட சில ''சலுகைகளும்'', நிர்வாக அதிகாரிகளாலும் இராணுவ இயந்திரத்தாலும் உரிய பலனைத் தராத நடைமுறைச் சூழலையும், அவர் கண்டுகொள்ளவே இல்லை

மோதல் தவிர்ப்பு உடன்பாடு முறிந்ததைத் தொடர்ந்து மீன்பிடித் தடை, பொருளாதாரத் தடை, கிளாலி கடல் நீரேரிப் போக்குவரத்துத் தடை ஆகியன அதிவேகத்தில் நடைமுறைக்கு வந்துள்ளன; இத்தடைகளால் இன்னல்களுக்குள்ளாவது தமிழ்மக்கள்தான். தமிழ்மக்களை இன்னல்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படுத்திவிட்டு, புலிகளையே கட்டுப்படுத்த முயல்வதாகவும் மாறாட்டம் புரிகிறார்.

(32 ஆம் பக்கம்) →



மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

# வாழ்வைப் பற்றிய தேடல்

**இயல்வாணன்**

புரியாப் புதிரொன்றை
முடிச்சவிழ்க்கும் பாரம் எனக்குள்.

உலர்ந்து போன இரவுகளில்
ஈரஞ் சொட்டச் சொட்ட
விழித்திருந்த அந்த நாட்களில் கூட
அதைப் புரியும் சந்தர்ப்பமில்லை.

தூங்கும் போதும்
எழுதும் போதும்
காற்றை வலித்து
மிதிவண்டியில் செல்லும் போதும்
பாரம் என்னை அழுத்துகிறது.

பிரயத்தனங்களின் முடிவு
பூச்சியமாகும் போது
அது சூன்யமெனத்
தோற்றந் தருகிறது.

இப்போது வரையில்
போலிகள் மதிலாகி
மனவீட்டைக் காக்க
நான் தூங்குகிறேன்
பயணிக்கிறேன்
அனைத்தும் அதே ஒழுங்கில்.

உப்பகலாக் கடல் நீரெனவான
அதற்குள் நின்று கொண்டே
கேட்கிறேன்
''வாழ்க்கை எங்கிருக்கிறது?''

புரியாப் புதிரின் முடிச்சவிழ்ப்பு
இன்னமும் தொடர்கிறது! ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பரிசு பெற்ற கவிதை

# உள்ளின் பறவை

செ. பொ. சிவனேசு

பறவைகளின் கீதங்களில் என்னுளம்
ஈடுபாடு கொள்கிறது
சுவைப்பதையல்ல
சேர்ந்தே இசைப்பதைத் தான் உணர்கிறேன்
இந்த 'லப்டப்' அதுவே தான்,

பறக்கும் அவற்றின் சிறகுகளில்
ஒட்டிக் கொள்கிறது என்னுளம்
உல்லாசத்துக்கல்ல
உலகுலா எடுப்பதற்கு -
இந்தப் 'படபடப்பு' அதுவே தான்.

அவற்றின் உடற் பஞ்சாய்
மிருது கொண்ட என்னுளம்
விடுதலை தவிர வேறெதை நாட முடியும்?

எல்லாமே பறவைகளினதாய்
இருக்கவும் தான் வேண்டுமா?

உயரப் பறக்கையிலும்
தாழ்வை நோக்கிய அவற்றின் பார்த்தலாய்
அலை மோதுதலும்
கூரான குணமிருந்தும் அலகுகள்
அங்கிங்காய்க் கொத்துகிற ஆவலாதியுமாய்
இன்னுமேன் எனது உளமும்?

இன்றுவரை எனக்கு விளங்கவேயில்லை
என்ன செய்ய வேண்டுமென்பது!

இமைகளிலிருந்து எனது விழிகளை
தூரத் துப்பி விடலாமா?
பாறையில் மோதி உளத்தை
மொட்டையாக்கி விடலாமா?
அலைமோதல் ஆவலாதித்தல்
அழிந்து தொலையுமா?

வேண்டும் எனக்கொரு விடுதலை -
எல்லாவற்றிலிருந்துமான! ☆



# ஏன் அழவில்லை...!



கருணை ரவி

ஏனம்மா
அழவில்லை ....?
நெஞ்சினில்
கவலை இல்லையா?
கண்களில்
கண்ணீர் இல்லையா?
சொல்லு ...

மாடு
மேய்ப்பதற்காய்
தரவைக்கு
போன அண்ணாவை,
துப்பாக்கிக் காயத்துடன்
நாகதாளி படர்ந்த
நாயுருவிப் பற்றைக்குள்
சடலமாக மீட்ட போது
கதறி அழுதியே......

பசியின்
கொடுமையில்
அப்பா
இளநீர் பிடுங்குதற்காய்
மரத்தில்
ஏறிய வேளை,
மேலே சென்ற ஹெலிகாரன்
குண்டினைக் கொட்டி
உயிரை எடுத்த வேளை -
நெஞ்சினில் குத்தி
புழுதியில்
புரண்டியே......

வற்றாப்பளை
அம்மனுக்கு
நேர்த்திக் கடன் தீர்க்க
பொங்கிப் படைத்த
அக்காவை,
கூவி வந்த ஆட்டிலறி
குதறிய வேளை,
ஓ... என்று கத்தினியே......

ஏனம்மா
இப்போது அழவில்லை ...?
தம்பியின்
வீரச்சாவு - உன்
இதயத்தை பிழியவில்லையா..?

ஓ!
இப்போது தெரிகிறது - நீ
ஏன் அழவில்லை என்று!

அப்பாவைப் போல......
அண்ணாவைப் போல......
அக்காவைப் போல......
தம்பி
அநியாயமாக
சாகவில்லை என்பதனால்
தானே......!

அம்மா......
இனி
நீ,
என்னையும் நினைத்து
அழமாட்டாய்! ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன எனது முகம்

**நாமகள்**

நான் தனிமைப்படுத்தப் பட்டவள் -
வீதிகளில்,
வகுப்பறைகளில்
வீட்டிலும் கூட.

ஆரம்ப நாட்களில்
இது
அலட்சியமாயும்
பின்னால்
சலிப்பூட்டுவதாயு மிருந்தது.

இப்போதோ
இந்தத் தனிமை
பயமேற்படுத்துகிறது
வெறிச்சோடிய மூலைகள்
என்னுள்
நடுக்கமேற்படுத்துகின்றன

விரும்பாத முகங்களுக்காகவப்
சிரித்தாக வேண்டும்.
வெறும் நான்கு சுவர்களுக்குள்
வகுப்பறை உரையாடல்களில்
''ரமணி சந்திரனி''ன் நாவல்கள்
அற்புதமானவை யென்றும்
''வைகாசி பிறந்தாச்சு''
நல்ல படமென்றும்
சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆனாலும் .....

இவற்றினிடையேயான
எனது நிமிர்வு
என் முகத்தின் மீட்பிற்காய்! ☆





# கடலே கொதித்தெழுக!

**நெடுந்தீவு மகேஷ்**



நீலக் கடல் மகளே,
நீ கரையில் ஓலமிட்டாய்!
காலக் கடற்பேய்கள்
கடல் நடுவில் ஆலமிட்டார்.
மேமாதம் பதினைந்து
மெய்சிதைத்துப் பொய்வடித்த
மாபாதகர் செயலால்
மாகடலே நீ சிவந்தாய்!

குமுதினிப் படகு செல்லும்
குறிகாட்டுவான் பயணம்
நெடுந்தீவு மக்களுக்கு
நிறைதுயராய் நீண்டதென்ன?
இரணத்தோ டெம்மக்கள்
இழவுதரும் செய்திவர
மரணப் பயணமதாய்
மகிழ்பயணம் மாற்றியதார்?

பயணம் புறப்பட்டோர்
பாதையறுந் தூர் தொலைக்க
மாலையிலே பலர் வரவை
'மாவலி'யிற் காத்திருக்க
கோரக் கொடிய செய்தி
கொண்டுவந்தார்
கண் சிவந்தோம்!

அழுதோம் அழுதோம்நாம்
அலைகிடந்து துன்பமுற்ற
பொழுதோ எம்தீவு மக்கள்
பொல்லாங்கை எண்ணவில்லை.

சதாசிவம் மாஸ்ரரிந்தச்
சண்டாளர்க் கேதுசெய்தார்
இது கொடுமை யேசுதாசன்
இயமருக்கென் கேடுசெய்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியப்பு தம்பி தங்கை
ஐயகோ சிறுமழலை -
போச்சு துயிர் போக்கடித்தோர்
கடற்காவல் போக்கிரிகள்.

இயமர்களைக் காவலுக்கு
இருத்தியதோ பேயாட்சி.
தயவகற்றி அப்பாவித்
தமிழர்களைத் துண்டாடும்
கொடியோர் தொலைந்தழிக!
கொதித்தெழுக நீ கடலே! ☆

* 1985 ஆம் வருடம், மே மாதம் 15 ஆம் திகதி காலையில், நெடுந்தீவு 'மாவலி' த்துறைமுகத்திலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்ட பயணிகள், இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் தடுக்கப்பட்டு, அவர்கள் பயணம்செய்த குமுதினிப் படகின் உள்ளேயே - வெட்டியும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டனர். இந்தக் குரூர நிகழ்வின் பத்து ஆண்டு நிறைவை, 1995. 05. 15 இல், நெடுந்தீவு மக்கள் துயரத்துடன் அனுஷ்டிக்கின்றனர்.

---

# சந்தேகங்கள்

**அல்லையூர் ஊர்மிளா**

நினைவு தெரிந்த காலந்தொட்டு
விலைகள் எக்கச்சக்கம் ...
பொருட்கள் மலியுமாம் -
புளுகுகிறார்கள்.
விளக்குகள் இல்லாமல்
சுவரில் தட்ட
பெரும் வெளிச்சம் வருமாம்.
ஆச்சரியம்!
நாடக மேடை போல்
ரீ. வி. பெட்டி
பெரிசாக இருக்குமாம் -
அம்மாடியோவ்... !
யாழ்ப்பாணத்தில்
புறப்படும் புகைவண்டி
அந்த ஒரு நாளிலேயே
கொழும்பு போய்ச் சேருமாம் - !
சுகமாகப் போகலாமாம்!
யாருக்குத் தெரியும்?
இவர்கள் சொல்லும் கதை
உண்மையா..... ?
என்னால் நம்ப முடியவில்லை!

# அப்பா கிழித்ததை நான் ஒட்டுவேன்!

**சங்கர்**

எனது அப்பா அடித்த அடியில்
உனது ஒருகாது செவிடானது
அவர்வழியில் அம்மாவும்
நடந்தபோது
மற்றக் காதும் செயலிழந்தது.
எதிர் வீட்டுக்காரனின்
உதையின் அதிர்ச்சி
உன்னை ஊமையாக்கியது.
உணர்கின்றேன் நான் -
நீ எவ்வளவு பாவம்!

நான் அனுபவிப்பது எல்லாம்
உனக்கும் வேண்டும்.
அதுதான் நியாயம்! தர்மம்!!

நான் போகும் இசைக்
கச்சேரிக்கு
நீயும் என் கூடவா.
கேள்! நன்றாகக் கேள்!!
உனது அபிப்பிராயத்தையும்
சொல்;
தவறாமல் சொல் -
நீ சொல்லித்தான் ஆகவேண்டும்.

* *

நீண்ட நாட்களாகவே
நீ பட்டினியில் கிடந்துள்ளாய்,

என்ன கொடுமை இது?
உனக்கு இப்போதுதேவை
சாப்பாடு.
ஆனாலும்
எல்லாவற்றையும் உடனே
தந்தால்
உனக்குப் புரையேறிவிடும்!

நீ போகக் கேட்கும் பாதை
பழுது
அந்தக் குண்டிலும் குழியிலும்
நீவிழுந்து காயமுறுவதை
என் மனம் தாங்காது.

உனது தளைகள் எல்லா
வற்றையும்
அறுக்க நான் உறுதியாயுள்
ளேன்.
எனினும்,
எல்லாவற்றையும் அறுத்தால்
திடீரென்று இரத்தோட்டம்
அதிகரிக்கும் -
அதனால் நீ மரணிக்கலாம்!

சரி! எழுந்துவா
இருட்டாக இருக்கிறதா?
பயப்படாதே,
அப்பா கிழித்து எறிந்த
கடதாசிகள் நிறையவே உண்டு -
அதைக் கொளுத்தினால்
இரவும் பகலாகும்.

ஆம்! சகோதரனே,
உனது துயர்கள் தொடர
ஒருபோதும் சம்மதியேன்
ஏன் மௌனமாய் இருக்கிறாய்?
உனது பிரச்சினைகளைச் சொல்;
உடனே சொல்!
இனியும் நீ சொல்லாமல்
இருப்பதை
நான் அனுமதியேன்! ☆

## வீரியம்

ஆதிலட்சுமி சிவகுமார்

காற்றை அள்ளி வீசுகிறது
ஒரு காலைப்பொழுது!
காலாற மெல்ல நடக்கிறேன் ...
உரசி உரசி
உஷ்ணத்தால் வெந்து தணிந்த
மூங்கிற் காட்டின் வெறுமை என்னுள்!
கண்முன்னே...... காலடியில்......
தன்னை மூடிக்கிடந்த
மண்ணைப் பிளந்துகொண்டு
மூச்சாய் வெளிவந்திருக்கிறது
முளையொன்று!
புதையுண்டு போகாமல்
வீச்சோடு வெளிவருகிறதே !
எப்படிச் சாத்தியம் .. ?
என்னுள்ளே இப்போது
வியப்புக் குறிகள் !
உருக்கொள்ளும் கிளைகள்
வானைத்தொடுவதற்கு முயற்சிக்க......
உள்ளே அதன்வேர்கள்
வாழ்வினை உறுதிசெய்ய .....
என்னமாய் இந்த எழுச்சி ... ?
இந்த முளை விருட்சமாகி
ஆயிரமாய் பூக்கும்......
பூக்கள் புதிதாக
விதைகளை உருவாக்கும்......
விதைகள் விழும் ....புதையும் !
ஆனால் மீண்டும் முளைக்கும்......
இப்போது எனக்குள்......
குளிரோடை பாய்கிறது ...
வெறுமை விலகி......
இதயத்துச் சாம்பல் மேட்டில்
நம்பிக்கை எனும்முளை முகிழ்க்கிறது !
" வீரியமுள்ளவை வாழும்...... "
காலைக்காற்று......
காதுக்குள்வந்து கிசுகிசுக்கிறது ! ☆

## சங்கு... சுடச்சுட...

நா. பாஸ்கரன்

ஓ... இளைஞனே !
எங்கே போகிறாய் ... இருளில்
போகும்போது
கவனித்துப் போ
கண்ணுக்குத் தெரியாத
வழித்தடைகள்
உன்பயணத்தை - உயிருடன்
எரித்துவிடும்.

வீதிகளைப் போல்
மேடுபள்ளமாகிவிட்ட
வாழ்க்கையை ...
வாகனங்களையே
வாழ்விடங்களாக்கிவிட்ட
ஏதிலிகளை ......
விலைவாசியால்
விழுங்கப்படாத - எஞ்சிய
எமது விலா எலும்புகளை ......
தூங்கிப்போன 'பல்பு'களால்
தூர்ந்துபோன இரவுகளை......
மின்னும் தாரகைகளாய்
தோன்றும்
உடைந்த கூரைத்
துவாரங்களை......
மெழுகுதிரியுடன்
மெழுகாக உருகும்
பள்ளித் தம்பிகளை......
வறுமையினால்......
கோழிகளையே
தோழிகளாக்கிய
பள்ளிச் சிறுமிகளை......
எண்ணிப்பார்
உனது பயணம்
உறுதியடையும்
விடுதலையானது
யாசித்துப் பெறுவதல்ல ! ☆

□ □ □

## யார் சொன்னது?

நடராஜா கிருஷ்ணகுமார்

'Sweet Sixteen' என்று
யார் சொன்னது ?
அந்தத் தோழனை
ரத்தத்தைப் பிழிந்து பிழிந்து
உயிர்காக்கும் - அந்த
உத்தமனைக் காணும்வரை
என்வரையில் அதை
ஏற்றுக் கொண்டவன் நான்.
வசந்தகாலம்
அவனது வாழ்வுக்குள் வர
மறந்து விட்டது
தென்றல்
அவனைச் சுட்டது
பள்ளிக்குச் செல்லும்
பகடிவிடும் வயது -
ஆம் !
சுகத்தைத் தெரியாமலேயே
துக்கத்தைத் துப்பறிகிறான்
தோழனே......
உலகெங்கும் உள்ள
உன் தோழர்கள் எத்தனைபேர் ?
'Sweet Sixteen' என்று
யார் சொன்னது ?
நண்பனே !
இன்று நான் வெட்கப்படுகிறேன்
ஏனெனில்
அதைக் கடந்துவிட்டதால்
உண்மை புரிகிறது
ஏன்
உன்னையுமே புரிகிறது.
தேசமே !
இந்தக் கேள்விக்கு
யார் பதில் சொல்வார்கள் ? ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்வு

ப. உமாகாந்தி

இடைக்கிடை அதிர்கிறது
பூமியல்ல, என்
இதயத்தின் பரப்பு இங்கே.
நண்பனே!
ஏனென்று கேட்கிறாயா ?
என், கண்முன்னால் நீ
நல்லோர்
இதயமதை நொருக்கும்போது
என்
இதயம் இங்கே அதிர்கிறது!

நண்பியே!
உன்னை நீ நினைத்துப் பார்
உன் உணர்வதனைத்
தட்டிப்பார்
உன் செயல்களெல்லாம்
உயர்வாக வேண்டாம்
உண்மையாக உள்ளனவா?
உன் மனத்தராசின்
நடுவிலது நிற்கிறதா?
அடுத்தவனை அழிக்காமல்
ஆளுமையை வளர்த்துக்கொள்!

அதோ பார்!
உலகத்தின் ஒளி ஒன்று
உதிக்கிறது - அது
நம் வீட்டுத் தலைவாசல்
நாடி இங்கே வருகிறது! ☆

□ □ □

## எரிகின்ற இரவுகளில்...

அமிழ்தினி

எரிகின்ற இரவுகளில்
விரைகின்ற ஏக்கங்கள்.
அதோ!
தெரிகின்ற வாழ்வுக்காய்த்
தேம்புவதும் தெரிகிறது
பரிகாசம் பண்ணுவது போல்
பால்வெள்ளிக் கூட்டங்கள்
பிரகாசம் இல்லாமல்
உரசிக்கொண் டிருக்கிறதே!

வருகின்ற வைகாசி......
வாழ்வுடனே தான்வருமா ...

எரிகின்ற இரவுகளில்
விரைகின்ற ஏக்கங்கள்.

இதயம் கனத்து
நெடுமூச்சுக் காற்றோடு
கண்ணீர் மழைசொரியப்
பரிகாசம் பண்ணுவது போல்
பால்வெள்ளிக் கூட்டங்கள்

கடிகார முட்களும்
விடியல் ஒன்றிற்காய்
விரைவன போல ...
நிற்காமலே .....
ஓடிக்கொண்டிருக்கின்றன! ☆



## பொறுத்திருப்போம் புலரும்வரை...

கி. குருபரன்

கருக்கிருட்டல்ல தமிழர்க்கு இப்போது
விசும்பில் விடிவெள்ளி!
உறக்க நேரம் இன்னும்
ஒருசில மணிதான்.
ஆனால்,
புலிக்குப் பூதாகர இருட்டிலும்
கண் தெரியும்;
நிச்சயம்
தமிழீழம் மலரும்
கதிரவன் காலையில் உதிக்கும்போது.

மதியத்தில் கூம்பும்
மலரல்லத் தமிழீழம் -
பகலில் பங்கயம்,
மாலையில் மல்லிகை,
இரவில் குமுதம்
மலர்ந்தால் வாடாது!
விழித்திருப்போம்... ..
கதிரவன்
கதிர்களால் இதழ்களைத்
திறக்கும் வரை! ☆

□ □ □

## அலைச்சல்

கு. சிறீகணேஷ்

நாலாம் பிறை பார்த்தால்
நாய் போல் அலைவரென்பார்!
நானோ ...
முழுநிலவைப் பார்த்துவிட்டும்
அனுதினமும் அலைகிறேன்!! ☆

## மரணம்

தமிழவன்

துளிர்விடும் குருத்திற்கு
வழிவிடும் சருகிலையின்
உயர்ந்த ..... உள்ளம்! ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையின் ஓராண்டு நிறைவு ஒன்றுகூடல்

ஹேமந்த்

'கவிதை' யின் ஓராண்டு நிறைவையொட்டிய ஒன்றுகூடல், கவிதை ஆசிரியரின் இல்லத்தில், 29. 3. 95 மாலை 4. 30 மணிக்கு நடை, பெற்றது. சுமார் முப்பதுபேர் கலந்துகொண்ட இந்நிகழ்வினைக புகழ்பெற்ற நவீன ஓவியர் அ. மாற்கு அவர்கள் இணைப்பாள ராகச் செயற்பட்டு நெறிப்படுத்தினார்.

**அ.யேசுராசா:**

மண்டபங்களில் நடைபெறுவதைப் போலல்லாது, சடங்கா சாரமின்றி 'மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி'யில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசை வழங்க வேண்டுமென்பதற் காகவும், கவிதையின் ஓராண்டு நிறைவாகவும், 'கவிதை'வெளி யீட்டுக்கு பல வழிகளிலும் உதவுகின்றவர்களுக்கு இதயபூர்வ மாக நன்றி தெரிவிப்பதற்காகவும் இந்தச் சிறு ஒன்றுகூடலை ஏற்பாடு செய்திருக்கிறேன். தனியே நான் இந்தச் சஞ்சிகை யின் ஆசிரியராக இருந்தாலும் கலை நேசிப்புடன் இயங்கும் கலை, இலக்கிய நண்பர்களின் கூட்டுச்செயற்பாட்டால்ஆனதே 'கவிதை' இதழ்; அத்தகைய நண்பர்களை வரவேற்பதில் மகிழ்வடைகிறேன்.

**திரு. அ. மாற்கு:**

'கவிதை'யை ஆரம்பித்தது தொடக்கம் இன்றுவரை, இந்த இதழ் தொடர்பாக அடிக்கடி யேசுராசா வந்து என்னுடன் உரையாடுவார். சில சந்தர்ப்பங்களில் அவருக்கு இந்த முயற்சி யில் சலிப்பு ஏற்படுவதை, அவருடன் கதைக்கும் போது அறி வேன். என்றாலும் நான் அவரைச் சோர்வடைய விடாது ஊக்கப்படுத்துவேன். இன்று 'கவிதை' இதழ் எல்லாருக்கும் அறிமுகமாகியுள்ளது. பல இளம் கவிஞர்கள் இதில் எழுது வது பாராட்டுக்குரியது.

**கவிஞர் சோ. பத்மநாதன்:**

இளங்கவிஞர்களுக்கான கவிதை இதழாக இருப்பதால் நாம் இதில் பெரிய அளவில் பலவற்றை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இன்று இந்த எண்ணம் மாற்றமடைந்திருக் கிறது. புதுக்கவிதைகள் யாப்புமுதலிய கட்டுக்கள் அற்றவை யாக எழுத்தாள்கை உள்ளவையாக உள்ளன. போராட்ட காலத்தின் போராட்ட வாழ்வுடன் இணைந்த - வாழ்வின் ஏனைய அம்சங்களையும் 'கவிதை' இதழில் காணமுடிகிறது; இது நல்ல அம்சம் (சில உதாரணங்கள் தருகிறார்) தலைப் புக் கொடுக்காது போட்டி நடத்துவதில் ஒரு சுகமும் மகிழ்ச்சி யும் இருக்கிறது. பல விடயங்களில் வித்தியாசமான நல்ல கவிதைகளைக் காணமுடிகிறது. கவியரங்கக் கவிதைகளுக்கு இனிமேல் ஒரு தலையங்கம் இல்லாமல் கவிஞர்கள் விரும் பும் பொருளில் கவியரங்கு இடம்பெறுமானால், இன்னும் சிறப்பாகவிருக்கும். 'கவிதை' மூலம்தான் இன்றைய யாழ்ப் பாணத்துக் கவிதைகளை வெளியுலகுக்குக் கொண்டுசெல்ல முடிகிறது.

'மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி'யில் பரிசு பெற்ற மூவ ரில் இருவர் வருகைதந்திருந்தனர். முதற் பரிசு பெற்ற த. ஜெய சீலனுக்கும், இரண்டாம் பரிசு பெற்ற இயல்வாணனுக்கும், ஓவி யர் மாற்கு பரிசுகளை வழங்கினார்.

**திரு. வளவை வளவன்:**

சுபமங்களா போன்ற சஞ்சிகைகளில் வரும் பேட்டிகளில் எமது பிரச்சினைகளைத் தேடிப் பீற்றிக்கொள்பவர்கள், 'கவிதை'யில் வெளியான கவிதைகள் சிங்களப் பத்திரிகை யில் மொழியாக்கம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டமை யின் தாக்கம் மிகப்பெரியது என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். காலகட்டம் நெருக்கடியாக இருப்பதால், நல்ல விடயங்களையும் பயனுள்ள நல்ல குறிப்புகளையும் எழுத முடிந்தவர்கள், முன்வந்து எழுதவேண்டும். 'கவிதை'யின் வெற்றியை அதைப்பற்றி பல இடங்களிலும் பலர் எழுதி யுள்ளதை வைத்து அறியமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. கருணாகரன்:**

ஒரு மகிழ்ச்சிகரமான சூழலில் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது. கவிதைக்கென்ற ஒரு இதழாக 'கவிதை' வெளிவருவதை நாம் வரவேற்றோம்; அதை நிறைவு செய்யும் வகையில் இன்று 'கவிதை' வந்துகொண்டிருக்கிறது. ஒரு சஞ்சிகைக்கு இருக்கவேண்டிய தொடர்பே கவிதையின் வெற்றியாக அமைந்திருக்கிறது படைப்பாளிகளுடன் தொடர்பு கொள்வதிலிருந்து அதன் விநியோகத் தொடர்பு வரை இந்தக் கவனிப்புண்டு என்பதை உணர முடிகிறது. ஒரு வருடத்துள் - இந்த ஆறு இதழ்களுக்குள் - 'கவிதை' பல நாடுகளில், பல பத்திரிகை சஞ்சிகைகளின் கவனிப்பைப் பெற்றிருக்கிறது. பிறமொழியில்கூட இதன் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதையும் நன்றாகக் கவனிக்கவேண்டும். இவ்வாறு 'கவிதை' பரவலாக அறிமுகப்படுவதன்மூலம் நமது இன்றைய இலக்கிய, கலை முயற்சிகள் எப்படியுள்ளன? அதன் திசைவழி எவ்வாறு உள்ளது என அறிய முடியும்.

**திரு. எஸ். எஸ். தங்கராசா:**

நமது சூழலில் இவ்வாறான சஞ்சிகைகள் அறிமுகமாவதும், அறிமுகப்படுத்தப்படுவதும் சிரமம். இதற்கு ஒரு காரணம் இச்சஞ்சிகைகள் விளங்கமுடியாதவையாக இருப்பதாகும். நல்ல ரசனையில்லாத காரணத்தால் இப்படியான சஞ்சிகைகளை பரவலாக அறிமுகப்படுத்துவதில் சிரமமிருக்கிறது; இது சில வேளைகளில் சலிப்பையும் தருகிறது. வாங்கும் சிலர் பணம் தராமல் இழுத்தடிப்பார்கள். எனினும் இதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்; 'கவிதை'யை நாம் எல்லாரும் வளர்க்க வேண்டும்.

**திரு. பொ. ஐங்கரநேசன்:**

விற்பனை என்ற தளத்தில் பார்க்கும்போது சஞ்சிகை வாசிப்பு என்பது மட்டமாகவே இருப்பதை அறியலாம். சஞ்சிகை வெளியீடு எதிர்நோக்கும் பெரிய சிரமம் விநியோகமே' அரசுரீதியான அல்லது அமைப்புரீதியான ஆதரவு எங்களுக்குக் கிடைப்பதில்லை. நானும் ஒரு சஞ்சிகையின் ஆசிரியன் என்ற முறையில் பல இடர்களை அறிவேன். அவ்வாறானதொரு ஆதரவு கிடைக்குமானால் சஞ்சிகையைத் தரமாக தொடர்ந்து கொண்டுவரமுடியும்.

தேநீர் விருந்தினைத் தொடர்ந்து, இந்த இனிய ஒன்றுகூடல் நிகழ்வு நிறைவுற்றது. ☆



## ஸ்நேகம்

**தி. செல்வமனோகரி**

இது -
மோகமல்ல ஸ்நேகம்
என்றறியாத் தோழமையுடன்
அவமாய் .....
நினைவுகளுடன் நீறி ... நீறி...

பாலை வனங்களுக்குள்
சாம்பராகும்
எத்தனிப்புக்கள் தான் !

ஏனென்று தெரியாமலே
ஒரு மௌனம்
கவிந்து போயிற்று .... ☆

□ □ □

## நாளை ஒரு நம்பிக்கை

**கமலரூபன்**

தத்துவம் -
அது நரசிம்ம அவதாரம்;
தத்துவப் புழுதியில் புரண்டவன் சொன்னது.
நேற்று நேற்றுடன் முடிந்தது;
இனி இன்றைக்கெல்லாம் புத்தம் புதிது !
மரணம் கொடியதுதான்
ஆனால் சாவு இனியது;
சாவில் இனிமைகண்டவர் உண்டு.
எந்த நேற்றும்
எந்த இன்றும்
எந்த நாளையும் நிலைப்பது இல்லை;
இருந்தாலும்,
நாளை ஒரு நம்பிக்கை நாள் ! ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரன் கூறுகிறான்...

ச. நித்தியராம் நாராயணன

நான்செல்லும் பாதையெல்லாம்
பெருமுட்கள்
நிறை கற்கள்
காலெடுத்து வைப்பதற்கோ
சிறிதும் இடமில்லை !
ஆயினும்
நான் நடந்து போனதன்பின்,
என் பாதை நடப்பவர்க்கு
நல்லதொரு பாதையென
நன்கமைய ......
பலர் நடப்பர் ! ☆

## மன்னித்துவிடு!

சந்திரா தனபாலசிங்கம்

அந்நிய தேசத்திருந்து
என்னையும்
அழைக்கும் அன்புறவே
என்னுயர் தேசத்திற்காய்
தமது
இன்னுயிர் நீத்த செல்வங்களை -
அவரை
தம்மடி சுமந்த கல்லறைகளை -
பிரிந்து
என்னால் வரமுடியாது.
உன்னால் முடிந்தால்
வந்துவிடு.
இல்லை -
என்னை மன்னித்து
மறந்து விடு! ☆



## வானவெளியிற்கூட...?

ஆதிரை

சித்திரை நிலவு
சிரித்தபடி வானில்...
நித்திரைக்குப் போகநிற்கும்
நீண்ட மரங்களின்
கற்றை மயிர் பிடித்தாட்டும்
காற்றுப் பையன் - அவன்
வட்ட நிலவிற்கு
வருத்துமோ குளிரென்று
வருகின்ற மேகத்தால்
வளைக்கின்ற போர்வை - அது
கிழிபட்டுப் போக
வருகின்ற வழியால்
எட்டியெமைப் பார்த்துக் - கண்
எறியும் முழு நிலவு.

அடுத்த பதினைந்தில்
அமாவாசை வானம்
தங்க நிலவையுருக்கி
தாரகை செய்துவிட்டதாரோ?
தங்கத் கட்டல்லோ? - பின்
தாரகை வெள்ளியானதேனோ?
போலி நிலவோ? - அது
பூசிக்கொண்ட பொன்முலாமோ?
வான வெளியிற் கூட
வாழ்க்கை ஏமாற்றுத் தானோ? ☆

## நிம்மதி

வான்மேகம்

நிழல்களாய்ப் போய்விட்ட
நிஜங்கள்!
புரியாது புண்படுத்தும்
மனிதர்கள்!
தெரியாமல் உளறும்
சிறுபிள்ளைத்தனம்!

புரியவைக்க முடியாது!
அதனால் தான்,
புறக்கணித்து -
நிம்மதியைத் தேடி...... ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் போட்டி – 3

பாடசாலை மாணவரை ஊக்கப்படுத்துவதற்காக இப்போட்டி நடாத்தப்படுகிறது. பரிசுக்குரியதாகத் தெரியப்படும் இரண்டு கவிதைகளுக்கு முறையே ரூபா 100/=, ரூபா 50/= பெறுமதியான அன்பளிப்பு அட்டைகள் வழங்கப்படும்; அவற்றைச் சமர்ப்பித்து விரும்பிய பொத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பரிசுகளை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த்தாய் பொத்தக நிலையம் வழங்குகின்றது. அத்தோடு முதற் பரிசுக் கவிதை, 'கவிதை' இதழில் வெளியிடப்படும்.

**விதிகள்:**

1. 'தமிழீழத்தில் இயல்பு நிலையைக் குலைத்தது சிங்கள அரசு தான். எனவே இயல்பு நிலையைத் திரும்பவும் கொண்டுவர வேண்டிய பொறுப்பு அரசுக்கே உரியது' என்பதைக் கருப்பொருளாகக்கொண்டு, 32 வரிகளுக்குள் 'கவிதை' அமைதல் வேண்டும்.
2. ஆண்டு 9 முதல் உயர்தர வகுப்பு வரை பயிலும் மாணவர் இதில் கலந்துகொள்ளலாம்.
3. இவ்விதழில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, கவிதையுடன் இணைத்து, கவிதைப் போட்டி, இலக். 1, ஓடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
4. ஒருவர் எத்தனை கவிதைகளையும் அனுப்பலாம்; ஆனால், ஒவ்வொரு கவிதைக்கும் தனித்தனிப் படிவம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. முடிவு திகதி: 20. 05. 1995

---

## ஈழத்தமிழன்!

க. முருகதாஸ்

*'ஆண்டாண்டு காலமாய் அழுது' புரண்டவன்*
*அந்நியப் படைகளால் அடிமையாய் வாழ்ந்தவன்*
*அண்ணனின் படையிலே சேர்ந்து கொண்டதால்*
*அட்ட திக்கையும் அதிர வைக்கிறான்!*

*புனிதப் பூமியில்*
*பூப்பறிக்க வந்தவனை*
*பூகம்பமாய் எழுந்து*
*புதைக்கிறான் மண்ணிலே!*

☆



□ 'மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி'யில் முதற் பரிசு பெற்றுள்ளீர்கள்; வாழ்த்துக்கள். வேறு போட்டிகளில் பரிசு பெற்றிருக்கிறீர்களா?

☼ யாழ். இந்துவில் படித்தபோதும் (1992 வரை) பிறகும் சில பரிசு, பதக்கங்களையும்; அகில இலங்கைக் கம்பன் கழகத்தில் - கவிதைப் போட்டியின்மூலம் இணைந்து - கம்பன் விழாக் கவியரங்கில் கவிதைபாடும் பெரும் பரிசையும் பெற்றிருக்கிறேன்! பரிசுகள் மிகச்சிறிய அளவுகோல்கள் தான்! இவற்றால் ஆற்றலின் மொத்த விசுவரூபத்தை எடைபோட முடிவதே இல்லை. இன்று பரிசுகளினால் கவிதைகள் பெருமையடைகின்றன; கவிதைகளால் பரிசுகள் பெருமையடையும் நாளையே இம்மண்ணில் எதிர்பார்க்கிறேன்.

□ உங்களைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுங்கள்.

☼ பதவி, பட்டங்கள் என்ற எல்லைகளைத் தாண்டி, 'செயவிற் செயலின்மையும் - செயலின்மையிற் செயலையும்' காட்டி, நெஞ்சுக்கு நீதியுடன் - தர்ம வழியில் - காலக்கட்டளை

### நேர்காணல்:
# த. ஜெயசீலன்

யாய் - வையத்தைப் பாலிக்கத் தோன்றும் மெய்க் கவிஞன் ஆகத் துடிக்கும் வெறும் மனிதன்.

□ எவ்வாறு கவிதை எழுதத் தொடங்கினீர்கள்?

☼ 1991 இன் பிற்பகுதியில் ஏற்பட்ட இயல்பான உந்துதல். கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள், அடியெடுத்துக் கொடுத்து ஆசீர்வதித்தார்; கவிஞர் இ. முருகையன் அவர்கள், 'அசைபிரிக்க'க் கற்றுத்தந்து யாப்புக்கடலில் அமிழ்தம் கடைய அருள்புரிந்தார்; 'சாளரம்' முதற்கவிதையை அச்சு முகவரியில் முன்மொழிந்தது; 'புலிகளின் குரல்' சிலவற்றை வானலையிலும் மலரவைத்தது; 'சிரித்திரன்' பலவற்றுக்கு செங்கம்பள வரவேற்புக் கொடுத்தது; திரு. சிவஞானசுந்தரம் ஐயா அவர்கள் நெஞ்சாரச் சீர்தூக்கிச் சிறக்க வைத்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக, அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் அவர்கள் என்னை உலகுக்கு அறிமுகப்படுத்தி, உரமேற்றி, இன்றுவரை பிழை திருத்திப் பீடேற்றுகிறார்; கவிதையைப் போற்றி வணங்கும் குடும்பம் எனக்குத் துணிவேற்றுகிறது. இன்று கவிதை தான் என் மூச்சென்று புரிகிறது!

☐ *மரபுக் கவிதையிலா புதுக்கவிதையிலா உங்களுக்கு அதிக ஈடுபாடு உள்ளது? விளக்குங்கள்.*

✪ மரபுக் கவிதைதான்!

நாடகம், சங்கீதம், கூத்து போன்ற கலைவடிவங்களுக்கு என்னென்ன தனித்துவங்கள் உண்டோ... அதேபோல, கலைகளின் உச்சமான கவிதைக்கு - இசைப்பாட்டிலில்லாத - ஓசைச்சிறப்பு தனித்துவமானது. வெறுஞ் சிந்தனைச் செய்தியைச் சொல்ல உரைநடை / கட்டுரை போதுமானது. இவ் உரைநடை / கட்டுரை நினைவிலும் நில்லாதது. ஆனால், கவிதையின் சந்த ஒத்திசைவு மக்கள் மனங்களில் அகலாமல் என்றும் குடியமர்கிறது; இதுதான் கவிதையின் 'சமூகப் பயன்பாடு'மாகும்; கவிதையின் அடிப்படைப் பண்புமாகும்.

ஓசை ஒத்திசைவிலிருந்து உருவாகும் யாப்பு மெய்க் கவிஞனுக்கு எப்போதும் கட்டுப்பாடாக அமையாது, எவ்வுணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் ஏற்றவாறு கைகொடுத்து உதவும். மேலும், மோனை, எதுகை இணைந்து தோன்றும் 'சொற்சேர்க்கைகள்' மொழிக்கு மெருகேற்றும; இதனோடு கலைநயமும், கவித்துவமும், கருத்தாழமும் கூடக்கூட மெய்க் கவிதை காலத்தில் நிலைக்கிறது. மற்றவை சிலநாட்களுக்குச் சிரித்துவிட்டு 'தேவையை நிறைவேற்றாமலே' தேய்ந்தழிகின்றன.

யாப்பிலுள்ள வகைவிரிவுகளையும், எளிமையான பல்வேறு வரையறை நெகிழ்ச்சிகளையும் அறியாமல், கவிதையின் சுதந்திரத்துக்கு சுகஞ் சேர்ப்பதுதான் இலக்கணம் என்பதைப் புரியாமல், அந்தப் பரிச்சயமே இல்லாமல், இலக்கணத்தை மீறுவது/ கட்டறுப்பது/ மரபை நிராகரிப்பது என்பது ஆற்றாமையின் வெளிப்பாடேதான்! மரபுக் கவிதையில் வீச்சுக்குறைவு, எல்லா உணர்ச்சிகளையும் பாட முடியாது என்கிறார்கள் - கம்பன் முதற்கொண்டு எங்களின் மஹாகவி, முருகையன், புதுவை ஆகியோர் எதைத்தான் யாப்பில் பாடாமல் விட்டார்கள்? ஆக,இயலாமை புதுமைக்காரர்



களில் உள்ளதேதவிர மரபுகளில் இல்லை. மேலும் வடிவம் இல்லாத எதுவும் தனித்தன்மை இழந்தே தீரும்!

மரபுகளை பண்டித பவனி என்றுவிட்டு - தாங்களே புரிந்து கொள்ள முடியாத 'கிரந்தச் சிந்தனைகளை' 'வரி முறித்தெழுதி' ''ஆகாகா'' என்று ஆயிரம் வியாக்கியானம் செய்வோர்... ஓசை, சொல், பொருள், கற்பனை, உவமை, உருவகம், அணி அழகுகளால் ஜொலிக்கும் 'செஞ்சொற் கவியின்பத்தை' - அச்சுயுகம் / உரைநடை யுகம் என்று அறிவுப் பொருளாக்க முயல்வதையும், ஓசைச் சுவையை ஏதோ தீண்டத்தகாததாக ஒதுக்குவதையும், எங்கள் பாரம்பரியச் சொத்தையும், தமிழின் உயர் விழுமியங்களையும் புறந்தள்ளிவிட்டு 'எட்டாப்பழம் புளிக்கும்' என்று விமர்சிப்பதையும் ஏற்றுச் சிரணித்துக்கொள்ளவே மாட்டேன். வெறும் பாலையை விட, எத்தனையோ அடுக்கு அழகுகளாற் கொழிக்கும் பூஞ்சோலை எனக்கு மட்டுமல்ல, எல்லார்க்கும் இனிப்பானதுதான்.

☐ *கவிதை உங்களில் எவ்வாறு உருவாகிறது?*

✪ Poet is born not made என்பார்கள். எதுவும் என்னால் மட்டுஞ் சாத்தியமாகிறது என எப்போதும் நான் கருதியதே இல்லை; இது, எனக்குக் கிடைத்த தெய்வீக வரமென்று உணர்கிறேன்; உணர்வு கடந்த பரவச, தவநிலையில் ஊற்றாகி உதித்துப் பிறிடும் கவிதை ஆற்றலின் சுருதியெல்லாம் 'அவன்' கொடுப்பதென்றே நம்புகிறேன். இந்த அடி நாதத்திலிருந்து என் கவிதைகள் கண் திறக்கின்றன.

☐ *நீங்கள் விரும்பும் கவிஞர்கள், கவிதைகள் பற்றி......*

✪ கம்பன், மாணிக்கவாசகர், அருணகிரியார், பாரதி போன்றவர்களின் தெய்வீக நிலைபேற்றையும், தெளிந்த வீச்சையும், ஞானச் செருக்கையும் கண்டு வியந்து மருண்டிருக்கிறேன். கண்ணதாசனின் இனிய, எளிய, அழகில் குளிர்காய்ந்திருக்கின்றேன். ஈழத்தில் மஹாகவி, புதுவை இரத்தினதுரை ஆகியோரின் உணர்ச்சித் துடிப்பை இரசித்து அவர்களின் பொழிவுகளை வாய் புலம்பியவாறே எனை மறந்திருக்கின்றேன். இப்பொக்கிஷங்களில் எடுத்ததெல்லாம் ஒளிவீசுகின்றன.

☐ *உங்களின் கவியரங்க அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்.*

✪ சங்கீத வித்துவான் பாடும் கீர்த்தனைகளை எழுதி வாசித்தால் எப்படி 'சப்பென்று' இருக்குமோ...... அதுபோலத்

தான் அச்சேறிய கவிதைகளும் இருக்கின்றன. கவிதையை வாய்விட்டுப் படிக்கும்போது ஏற்படும் உணர்வே உச்சமானது; கவியரங்குகள் இதற்குக் களமாகின்றன. பழைய பல்லவிகள், பகடிச் சிலேடைகள், சொல்லடுக்குகள், விரக்தி வெளிப்பாடுகள் இன்று வழக்கிழந்து ஓய்வெடுக்கத் தொடங்கிவிட்டன. இளரத்தங்களின் நெஞ்சைத் தொடும் நெருப்பையுஞ் சுடும் கவிதைகள் அரங்கேற ஆரம்பித்துவிட்டன. இன்று கவியரங்கம் புதுமிடுக்குடன், புது மதிப்புடன் சமூகத்தின் கைகளைப் பற்றி, கண்ணீர் துடைத்து, வலியகற்றி ஒத்தடமிடுகின்றன; உரைத்துப் பார்த்து உண்மை சொல்லுகின்றன; போருணர்வேற்றிப் புதுப்பாதை சொல்கின்றன. குறிப்பாக, கம்பன் விழாக் கவியரங்குகள் ஈழத்து அரங்கக் கவிதைகளுக்கே புத்துயிர் கொடுத்திருப்பது மறுக்க முடியாத உண்மை!

□ **இளங்கவிஞர்களின் வளர்ச்சிக்கு எத்தகைய செயற்பாடுகள் தேவையெனக் கருதுகிறீர்கள்?**

☼ உலகில் எம்மொழியிலும் இல்லாத அளவுக்கு எம்மொழியில் கவிதையின் பாரம்பரியம் விரிகிறது; உலகத்துக்கே வழி சொல்லி நிமிர்கிறது! எங்கள் 'தாய்க் கவிஞர்கள்' அன்றே தொட்ட எல்லைகளை இன்று ஒரு குருவியும் எட்ட முடியவில்லை! இது ஏன்? எங்களை நாங்களே எடைபோடாமல், 'ஒன்றுமே இல்லாதவர்கள்' போல மேற்கத்திய முகமூடி போட்டு, இவ்வளவுதான் கவிதையென்று எல்லையிட்டு - எங்களை நாங்களே தட்டிக்கொடுத்து - குறுகிய வட்டத்துக்குள் தேங்கிவிட்டோம். சிறு சாதனைகளால் எங்களுக்குள் மகிழலாமே தவிர, சொந்த முகமிழந்த நிலையில் 'எங்களைக் கொண்டு' மானுடத்துக்கு வழிகாட்டவே முடியாது. இளையவர்கள் என்றுமில்லாதவாறு, எல்லாரையும் விட நிமிர்கிற நாளில் எங்கள் முதுசங்களின் வெற்றிகளை அளவுகோலாகக் கொண்டே தங்களை, புதுவீச்சோடு வளர்க்க வேண்டும். திருப்திப்பட்டு 'சாதித்துவிட்டோம்' என்று தேங்கிவிடாமல் தவறுகளை, அறியாமைகளை திருத்திக் கற்றுக் கரையேற வேண்டும். அன்றிலிருந்து, சிறகைக் கொடுப்பவர்களை விட, சிறகை அறுப்பவர்களே வெகுத்திருந்தபோதும் ஆன்மீக நம்பிக்கை எனும் பலத்தைக் கொண்டவர்கள்தானே உச்சங்கண்டு காலத்தில் நிற்கிறார்கள்? உணர்ந்து அணிவகுத்தால் இயற்கை தானாகவே வழிவிட்டுத்தரும். எதிர்காலம் எங்களுடையதாகவே இருக்கும்.

□ **'கவிதை' இதழ்பற்றி உங்கள் மதிப்பீடு....?**

☼ நாட்டுக்குத் தேவையான முயற்சி; இன்றைய போர்க்காலத்தை பலமுனைகளில் படம்பிடிக்கிறது. தமிழனின் தொன்மையான சொத்துக்களை, உயர் விழுமிய மரபுகளை இளையவர்க்கும், அறியாத முதிர்ந்தவர்க்கும் கலைநயத்துடன் உணர்த்த 'க தை' மேலும் முயல வேண்டும்; இவ்விதழின் வாசம் எட்டுத்திக்கும் பரவ என் இனிய, இதய வாழ்த்துக்கள். நன்றி! ☆

□ □ □

# கரையில் கரையும் கவி!

**த. ஜெயசீலன்**

சுற்றி...... சொர்க்கமாய்ச் சூழ்ந்திடும் பாற்கடற்
சுந்தாத்தெழிற் செல்வமெஞ் சொந்தமாம்!
கத்தி ஆர்த்துமே கைகளைக் கோத்தெழும்
காற்றுடன் திரை காதலாய்ப் பேசுமாம்!
பற்றி, மஞ்சளாய்ப் பாயும் முகில்களைப்
பாட்டில் ஆட்டிடுஞ் சூரியப் பாவலன்
தத்தி எல்லைப் பனைக்குள் ஒளிக்குமுன்
சந்தனச் சுடர் அந்திமேற் பூசுவான்.

'பண்ணை ரோட்டில்' படுத்த பாலத்திலே
பாதம் வைத்துப் பரவும் இயற்கையை
கண்ணிமைச் சிறகோய்ந்து தின்றதை......,
கரையிசைக்கும் ''ஏலோ''க் கவி கேட்டதை ...,
மின்னும் வெள்ளிக் கடல் மடி நீந்தியே
மீனுடன் கதை பேசிச் சிரித்ததை
மண்ணமர்ந்து விண் தொட்டநிம் மதியினை
வாடி நின்று விரக்தியாற் பாடுறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்து கரை வலை விசியும்
காரல், சூடைஎனக் குஞ்சு மீன்களே
பார்த்து ....., மாய்க்கும் பசிப்பிணி மாற்றிட
பாரை, ஒட்டி அறக்குளா தேடினார்;
வேர்த்து ஆழ்கடல் மீறினார்; ''கர்த்தரே''
'வீடு' சேர்த்து விடுமெனக் கெஞ்சினார்
வேற்று சிம்மம் வெடிப்பசி தீர்த்ததாம்!
வீழ்ந்த 'சூரியர்' மேலெழ வில்லையாம்.

கையளைந்தே... கடகம் நிறைத்திட
காசுமீன்கள் வெகுத்துக் கொழிக்கவும்
''செய்வதேதெனச்'' சீவியச் சிறையிலே
சீவன் விட்டவர் எத்தனை? பிஞ்சதன் -
மெய்; 'உலர்கரு வாடென'ச் சூம்பவும்
வீடு நேவிக் 'கனனினால்' பாறவும்
பொய்ப் புலர்வினிற் பூத்தபின்னே 'பொறிப்
பூட்டில்' வாடிப் பொசுங்குவோர் எத்தனை?

'வா'என அலைக் கை வர வேற்பினும்
வாடை வீசி 'மீன் பட்டதை'ச் செப்பினும்
பாலைதீவின் அந்தோனியார் வாடினும்
பட்டதீவெலாம் பாசமாய்த் தேடினும்
சா அணைத்துச் சரித்திரஞ் சாய்ந்தது
சந்திரன் அதைத் தாங்கலை தேயுது
ஏன்? இம் மண்ணிலே இரணியர் தெய்வமா?
இரட்சகப் பிரக லாதரைச் செய்வமாம்.

எண்ணமின்னும் எரிந்திட வில்லைகாண்
ஏற்றம்மீள... எது வழி? என்னவாம்?
கண்ணைவிட்டுக் கனவிடை தோற்பதோ?
காதலாகிக் கசிந்ததை விற்பதோ?
விண்ணர் ஆழியில் வேலிகள் போடவோ?
விதி பொறுக்குமோ? விதலைபோல் நிற்பமோ?
திண்ண (த்) தோள்முறுக் கேறுமோ? எல்லையே
தீக்குளிக்குமோ? சீவியம் வெல்லுமோ?

கைவிலங்கையெம் கடலினுக் கிட்டபேய்க்
கப்பலைச் 'சக்கையாலே' இடித்தவர்
செய்தியாகமே 'செத்ததை' மீட்டிடும்.
'தீவுயிர்க்க' சஞ்சீவியும் நீட்டிடும்.
பைய எங்கள் பரம்பரை வீரியம்
பாய்ந்து துன்பம் பறக்குதே! வீழ்ந்தவர்
எய்த அம்பு 'மராமரம்' பிய்க்குமாம்.
ஈழச்சோகம் இறக்குமாம்; காத்துளோம். ☆



# கவிதைக் கலை

## சோ-பத்மநாதன்

5

## கவிஞனின் கருவிகள்

### 11 - படிமமும் குறியீடும்

கருத்து வடிவில் நாம் கேட்பவற்றை - படிப்பவற்றை - விரைவில் மறந்து விடுகிறோம். காட்சி வடிவில் பார்ப்பவை நம் நெஞ்சில் நிலைத்து நிற்கும். கவிஞனுக்கு இது தெரியும். உவமை, உருவகங்கள் கொண்டு அவன் வாசகன் மனதில் சித்திரந்தீட்டுகிறான்.

படிமம் [image] என்பது உருவகத்தை விடப் பரந்துபட்டதாக - சில வேளைகளில் உருவகங்களின் தொகுதியாக - அமையும். கட்புலமாக மட்டுமன்றி, செவிப்புலமாகவும், தொடுகை முதலிய புலன்களின் அடிப்படையிலும் படிமம் அமைவதுண்டு.

திருக்குடந்தையில் கோயில் கொண்டருளும் திருமாலைப் பாடுகிறார் நம்மாழ்வார். நீர்வளம் மிக்க ஊர் அது. நெல்வயல்களெல்லாம் விளைந்துள்ளன. முற்றிய நெற்கதிர் தலைசாய்த்து, காற்றில் அசைவது சாமரை வீசுவது போலிருக்கிறது. ''பெருமானே, செந்நெல் கவரிவீச, நீ கிடக்கும் அழகிய கோலத்தைக் கண்டு உருகி நிற்கிறேன்!''

''சீரார் செந்நெல் கவரிவீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்
கிடந்தாய் கண்டேன் எம்மானே''

தன் காதலனையே நினைந்து ஏங்குகிறாள் அவள். தன் நிலையை அவனுக்கு எடுத்துச் சொல்வதற்கு, தன் நெஞ்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடம் தூதனுப்புகிறாள். தூதுபோன நெஞ்சு திரும்பி வருவதாய் இல்லை! தோழியோடு தன் தவிப்பைப் பகிர்ந்து கொள்ளுகிறாள் இத்தலைவி. ''தோழி, அவரைக் காணப் போன நெஞ்சுக்கு உள்ளே புக அனுமதி கிடைத்ததோ என்னவோ! அவனுடைய வாசலில் - அதுவும் இந்தப் பனிபொழியும் வேளையில் - தன் கைகளால் உடம்பைப் பொத்திக்கொண்டு, பாவம், என் நெஞ்சு நிற்கிறதோ தெரியவில்லையடி...... !''

''கடும்பனித் திங்கள்தன்
கை போர்வையாக
நெடுங்கடை நின்றதுகொல்
தோழி! -
ஆய்மணிப் பைம்பூண்
அலங்குதார்க் கோதையை
காணிய சென்ற என் நெஞ்சு!''
- முத்தொள்ளாயிரம்

கண்ணால் காணமுடியாத நெஞ்சுக்கு ஓர் உருவம் கொடுத்து, குளிரால் நடுங்கியபடி, வாசற்புறத்தே அதை நிற்க வைத்துவிடுகிறான் கவிஞன்.

எங்கும் எதிலும் இறைவனைக் காண்பது அருளாளர்கள் இயல்பு. பொய்கையாழ்வார் நாராயணனை ஆராதனை செய்கிறார். சிறிய அளவில் செய்து அடங்குவதாயில்லை அவர் ஆரா அன்பு.

உலகம் தகழியாகிறது. கடல் நெய். கடல்விளிம்பில் எழும் சூரியன் விளக்கு (விளக்கு ஏற்றியாயிற்று. மிகுதி வழிபாடு உண்டே!). தான் தொடுக்கும் பாமாலையை ஆண்டவன் பாதத்தில் சூட்டுகிறார் ஆழ்வார்:

''வையம் தகழியா
வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்
விளக்காக - செய்ய
சுடராழியான் அடிக்கே
சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று''
- பொய்கையாழ்வார்



இனி, புகழேந்தி தீட்டும் ஒரு படிமத்தைப் பார்க்கலாம். சூரியாஸ்தமனம். வானம் அரங்காகிறது. இருள் படாம் (திரை) சூரியன் நடிகன். அஸ்தமன வேளையில் மந்திரம் ஓதும் வேதியர் பின்னணிப் பாடகர். பார்வையாளர் உலகத்து மக்கள். தேர்ந்த நடிகனான சூரியன் ஆடிக்கொண்டே போய் மேற்கு மலையின் பின் மறைந்துவிடுகிறான்.

''மாயிரு ஞாலத் துயிர்காண
வானரங்கில்
பாயிருள் என்னும்
படாஅம் வாங்கி - சேய்நின்று
அறைந்தாரணம் பாட
ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை''

புகழேந்தி கற்பனையில் சூரியாஸ்தமனம் ஒரு நாடகமாகி விடுகிறது.

'ஹைக்கூ' புனைவதில் நிபுணரான 17 ஆம் நூற்றாண்டுக் கவிஞர் பாஷோ ஒருமுறை, புகழ்பெற்ற அரண்மனையைக் காண நேர்ந்தது (யொஷிற் சுனே தலைமையில் போர்வீரர்கள் பலர் அவ்வரண்மனையைத் தாக்கி அழிக்க முயன்று மாய்ந்தார்கள் என்பது வரலாறு); இப்பொழுது அவ்விடத்தே காடு மண்டிக் கிடக்கிறது.

''வாளேந்திய வீரர்களின் கனவுகள்
மின்னிய இடத்தில் இன்று
கோடை காலத்து பச்சைப் பூண்டுகள்''

மேலே காட்டிய படிமங்கள் எல்லாம் கட்புலமாக இருப்பதை வாசகர்கள் கவனித்திருக்கக் கூடும். பாஷோவின் இன்னொரு 'ஹைக்கூ'வில் கட்புல, செவிப்புல படிமங்கள் அற்புதமாக இணைகின்றன:

'' ஆட்காட்டியின் கீச்சு
ஓசையைக் கிழித்துக்கொண்டு
இருளினூடு வெட்டும்
மின்னற் கீற்று''

* * *

கவிஞன் கையில் உள்ள பிறிதொரு கருவி குறியீடு ஆகும். அட்சர கணிதத்தில், ஒரு பொருளின் பெறுமதி தெரியாத நிலையில் அதை X என்று வைத்துக்கொண்டு பிரச்சினையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்க முனைகிறோம். ஈற்றில் X இன் பெறுமதி இன்னதெனக் கண்டு பிடிக்கிறோம். X என்பது ஒரு குறியீடு; தெரியாத பெறுமதியைக் குறித்து நின்றது. கவிதையில் வரும் குறியீடும் இதுபோலத்தான். தன்னளவில் அதற்கு பெரிய பயன்பாடு இல்லை. ஆனால் அது - மறைமுகமாக - குறிக்கும் பொருள் எமக்குத் தேவையானது; பயன் தருவது. 'மறைமுகமாக' என்று குறிப்பிட்டேன். குறியீடு நேரிடையாகச் சொல்வதில்லை; பூடகமான குறிப்பு அதில் இருக்கும். மேனாட்டில் சிவப்பு ரோஜா காதலுக்குக் குறியீடு. ஓர் இளைஞன், ஒரு பெண்ணுக்கு ரோஜாவைப் பரிசளிப்பது, '' நான் உன்னைக் காதலிக்கிறேன் '' என்று சொல்வதற்குச் சமம்.

சினிமா இயக்குநர்கள் இவ்வுத்தியை நன்கு பயன்படுத்துவது காணலாம். திருமணம் முடிந்து தேன்நிலவு போகும் தம்பதி விபத்தில் சிக்குகின்றனர்; மாப்பிள்ளை இறந்துபோகிறான்; பெண் அநாதரவாக விடப்படுகிறாள். இயக்குநர், இலையெல்லாம் உதிர்ந்து நிற்கும் ஒரு தனிமரத்தைக் காட்டுகிறார். அது குறியீடு; எல்லாம் இழந்துபோய் நிற்கும் நாயகியைக் குறிக்கிறது.

மஹாகவியின் புகழ்பெற்ற கவிதை :

'' சிறுநண்டு மணல் மீது
படமொன்று கீறும்
சிலவேளை அதைவந்து
கடல்கொண்டு போகும்.''

மேலோட்டமாகப் பார்த்தால், ஈரமணலில் நண்டு கீறிய படத்தை, கடல் அலை வந்து அழிப்பதைக் கவிஞர் கூறுகிறார். ஆனால், 'புதியதொரு வீடு' நாயகி மயிலியின் வாழ்க்கையும் நண்டு கீறிய படம்போல அழிந்து விடுகிறது என்பது, மறைமுகமாகக் குறிக்கப்படுகிறது. ஆக, நண்டு கீறிய படம் ஒரு குறியீடு - மயிலியின் வாழ்வுக்கு.

கல்வயல் வே. குமாரசாமி குறியீடு என்னும் உத்தியை அதிகம் பயன்படுத்தும் கவிஞர். அவருடைய 'நிரை மீட்பு' என்ற கவிதையைப் பார்க்கலாம்.

'' ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
வேலி பிரிச்சு அவற்றை வெளியிலே
கொண்டுபோய்
காலித்தனம் பண்ணக் கண்டும்
பொறுக்கிறதே?''



கல்வயலார் பேசுவது நாம்பன் கன்றுகளை வேலி பிரிச்சுப் பிடித்துக்கொண்டு போவது பற்றியல்ல என்பது, எண்பதுகளில் (ஈழத்தில்) நடந்த சம்பவங்களை அறிந்தவர்களுக்குப் புரியும். ஏரிமுதிரா இளநாம்பன் கன்றுகள் வலுக்கட்டாயமாக தமிழ்த் தேசியப் படையில் சேர்க்கப்பட்ட இளைஞர்களுக்குக் குறியீடு.

ஓர் இருபத்தைந்து வயது இளைஞன், கழிந்துபோன கால் நூற்றாண்டைத் திரும்பிப் பார்க்கிறான்; தன் வாழ்க்கையை மதிப்பீடு செய்கிறான்:

'' எங்கும் அலைகள்
எறியும் கடல்நடுவே
குந்தியிருக்கும் றொபின்ஸன்
குறுசோபோல்
பேரறியா நச்சுப்
பிரண்டை விளைகின்ற
ஓர் தீவில் வந்தே
ஒதுங்கிக் கிடக்கின்றேன்.''

- மு. பொன்னம்பலம்

'ஆக்காண்டி' என்பது பழைமையான நாட்டார் பாடல். ஆக்காண்டி 'கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தது.' '' வைத்ததுவோ அஞ்சுமுட்டை பொரித்ததுவோ நாலு குஞ்சு!'' குஞ்சுகளுக்கிரைதேடி உலகெலாம் சுற்றுகிறது குருவி. வண்டிகள் ஓட்டி மனிதர்க்கு உழைக்கிறது. கையால் பிடித்துக் கரைவலையை இழுக்கிறது. நெய்யும் தறியில் நின்று சமர் செய்கிறது. ஆனாலும் குஞ்சுக்கு அரை வயிறு போதவில்லை. தாய்ப்பறவை தன் கதையைச் சொல்கிறது. கோபமுற்ற குஞ்சுகள் -

'' கத்தி எடுத்தார்
கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சொன்னார்
யுகம்மாறும் என்றுரைத்தார்
எங்கும் புயலும்
எரிமலையும் பொங்கிவரச்
சென்றவரைக் காணேன்
செத்து மடிந்தாரோ......!''

என்று ஏங்குகிறது ஆக்காண்டி. குஞ்சுகள் வர்க்கப்போராளிகளைக் குறிக்கின்றன. அவை தம் வயிற்றுக்காக நடத்தும் போராட்டம், சுரண்டப்படும் உழைப்பாளர் தம் விடிவுக்காக நடத்தும் போராட்டமாகிறது. சண்முகம் சிவலிங்கத்தின் அற்புதமான குறியீடு இது. ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடல்

கவிதையெனும் பாவேடு, வேர்விட்டுத் தன் விழுதூன்றிக் கிளைபரப்பி விருட்சமாகி நிற்கும் எழிலான நிலைகண்டு, கவிஞர்களாகிய நாம் உள்ளம் மகிழ்கின்றோம், தொடரும் அதன் வளர்ச்சிக்கு உரமூட்ட என்றும் நிறைவான ஆவலுடையேன் ...

செ. மகேஷ்
யாழ்ப்பாணம்.

'கவிதை' ஆண்டுமலர் படித்தேன். காலம் கடந்தாலும் எனது வாழ்த்துக்களை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்... இளங்கவிஞர்களை ஊக்குவிப்பதோடு, கவிதைபற்றிய ஒரு ஆழமான பிடிப்பை ஏற்படுத்துவதிலும் தங்கள் இதழ் பெரும் பங்களிக்கின்றது.

ஆதிலட்சுமி சிவகுமார்
கோண்டாவில்.

'கவிதை' இதழின் முதலாம் ஆண்டு நிறைவு 'மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி'யில் எனது கவிதையையும் ஏற்றுக்கொண்டு, தேர்ந்தெடுத்து, பரிசை வழங்கியதற்கும்; தேநீர் விருந்து உபசாரத்துக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

த. ஜெயசீலன்
யாழ்ப்பாணம்.

---

## குறைவில்லைச் சாவிற்கு . . !

### தயா லோகதாசன்

புதிய ஆடையுடன்
புத்தாண்டுப் புதுநாள்
வானவெடி ஓசையுடன்
தைப்பொங்கல் திருநாள்
தித்திக்கும் பண்டமுண்ணும்
தீபாவளி பெருநாள்
நல்ல இன்பம் தந்திருக்கும்
நத்தார் ஒளிநாள்
அத்தனை நாட்களிலும்
கடைகளிற்கு விடுமுறை
ஆனால்......
சவப்பெட்டிக் கடைகளில்
குறைவின்றி விற்பனை ! ☆

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக, இருபது இலட்சத்துக்கும் அதிக பெரும்பான்மை வாக்குகள், ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு அளிக்கப்பட்டன. கருத்துநிலைத் தெளிவும், உறுதியான செயற்பாட்டுத் திறனும் அவரிடம் இல்லாத காரணத்தால் விளைந்த மாறாட்டங்களே, இன்றைய போர்ச் சூழலை உருவாக்கின.

ஆம்! தமிழ் மக்கள், மீண்டும் போரொன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்! ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org